(1ம் எதிரி கனகராஜ், 2ம் எதிரி சந்தோஷ்குமார், 3ம் எதிரி பிரகாஷ், 4ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

**<u>Crl.M.P.980/2024ல் பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது, சுப்புராஜ் நடத்தி வந்த தன்யாஸ்ரீ கடையை அவரது மனைவியும், மாமியாரும் வந்து நடத்துவார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது, 1 ம் எதிரியின் அண்ணனை நான் ஒருமுறை பார்த்துள்ளேன் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி கனகராஜ், சுப்புராஜ் கடைக்கு சென்று, அங்குள்ள சுப்புராஜ், அவரது மனைவி, அவரது மாமியார் ஆகியோரிடம் பேசுவார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி கனகராஜ் கார் வைத்திருந்தார் என்றும், அந்த காரில் சுப்புராஜின் மனைவி, மாமியார் ஆகியோரை பஸ்டாப்பிலிருந்து அவர்களது வீட்டிற்கு அழைத்து வருவார் என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்புராஜின் அண்ணன் என்னிடம் போன் மூலம் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி கனகராஜ் என் கடையில் வேலை பார்க்கவில்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து அவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னிடம் போட்டோ காண்பித்து விசாரித்தார்கள் என நான் சொல்வது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. எனது சிக்கன் கடையின் உரிமத்தை ..........

போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை.

**<u>4, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-22** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பேபி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 29th day of October 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.08.2021 அன்று கரூர் மாவட்ட குற்ற ஆவண பதிவேடு காப்பக ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, பசுபதிபாளையம் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் இருந்து வந்தேன். அன்றைய தினம் பசுபதிபாளைய கா.நி.கு.எண். 82/2018 ச/பி.302 இதச வழக்கை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வழக்கில் இறந்துபோனவரை அடையாளம் காணவேண்டி, சாட்சி எல்லம்மாள் என்பவரை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக இரத்தபரிசோதனை செய்ய வேண்டி, இரத்தமாதிரி சேகரிக்க வேண்டி, நீதித்துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து, உத்தரவுப்பெற்று, மேற்படி சாட்சி எல்லம்மாள்

என்பவரை, 04.08.2021 அன்று கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆஜர் செய்து, அவரிடமிருந்து இரத்த மாதிரி எடுக்கப்பட்டு, பின்னர் சாட்சி எல்லம்மாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சாட்சிகள் மோகன்ராஜ், ராஜேந்திரன் ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

**1** முதல் **3** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாக்குமூலங்கள் அனைத்தும் வழக்கிற்கு தகுந்தாற்போல் நான் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்தேன் என்றால் சரியல்ல.

**4, 5** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்